# தமிழ்நாட்டின் சாதனைகளை ஒன்றிணைத்த கல்வி முனைவோர் சிறப்பு விழா



2025 நவம்பர் 18 அன்று சென்னையின் செட்டிநாடு ராணி சீதை அரங்கத்தில்நடைபெற்றசென்னைஅத்தியாயம்2025.KGவிருதுகள் மாநில அளவிலான அங்கீகார பயணத்தில் ஒரு புதிய உயரத்தை அடைந்த ஒரு வரலாற்று நாள் ஆகும். பல துறைகளில் செயல்படும் திறமையாளர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் சாதனைகளை கொண்டாடும் மேடையாக இந்த விழா அமைந்தது. இந்த விழாவில் தொழில்முனைவோர், சமூகசெயற்பாட்டாளர்கள், கல்வித்துறையின் நிபுணர்கள், பெண் தலைவர்கள் மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவன தலைவர்கள்உட்படநூற்றுக்கணக்கானவிருந்தினர்கள்பங்கேற்றனர். நிகழ்வின் ஒவ்வொரு தருணமும் சமூகத்தையும் தொழில் மற்றும் கல்வித்துறையையும் ஊக்குவிக்கும் விதமாக அமைந்திருந்தது.




## விழாவின் முக்கிய விருந்தினர்கள் மற்றும் சிறப்பு பங்களிப்பாளர்கள்

இந்த விழா நான்கு முக்கிய நபர்களின் சிறப்பு வருகையால் மேலும் பிரகாசமடைந்தது. தெலுங்கானா மற்றும் புதுச்சேரி - முன்னாள் ஆளுநர் முனைவர் தமிழிசை சௌந்தரராஜன், முன்னாள் நீதிபதி முனைவர் மு. வெங்கடேசன், முன்னாள் தலைமை வருமான வரி ஆணையர் வி.மகாலிங்கம், IRS மற்றும் தொழில் வழிகாட்டி மாத இதழின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் முனைவர் எஸ்.சம்பத் ஆகியோர் விழாவின் பெருமையை மேலும் உயர்த்தினர். இவர்கள் பகிர்ந்த ஊக்கமான உரைகள் நவீன தலைமுறையினரின் முன்னேற்றத்தை வலியுறுத்தும் செய்திகளால் நிறைந்திருந்தது. சாதனைக்கான கடின உழைப்பு, சமூகப் பொறுப்பு, கல்வி துறையின் வளர்ச்சி, மாணவர்களின் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்துஅவர்கள்பகிர்ந்தகருத்துகள்.விழாமுழுவதும்சிந்தனையூட்டும் ஆற்றலை ஏற்படுத்தின.




## கல்வி திறன் வளர்ச்சி விழாவின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்த நிறுவனங்கள்

KG Awards 2025 விழா பல திறமையான நிறுவனங்களின் இணைப்பால் உயர்ந்த தரமும் வலுவான தாக்கமும் பெற்றது. அய்யா பவுண்டேஷன், கல்சன் மீடியா பிரைவேட் லிமிடெட், நியூஸ்7 டிவி, ஹலோ மாஸ் மீடியா, கல்வி டைம்ஸ், தொழில் வழிகாட்டி, மற்றும் எப்.டி.டி.எஃப் போன்ற நிறுவனங்கள் விழாவின் வெற்றியில் முக்கிய பங்காற்றின.

## எதிர்கால நோக்கம் - தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான தெளிவான இலக்கு

KG விருதுகள் தனது வருங்கால பயணத்தில், தமிழ்நாட்டின் இளையதலைமுறையினர் தொழில் துறைக்கும் பெரும் மாற்றங்களை கொண்டு வரும் முக்கிய துறைகளில் கவனம் செலுத்துகிறது. இன்றைய தலைமுறையின் திறமைகளை மேலும் முன்னேற்றும் முயற்சியாக, கேஜி அவார்ட்ஸ் இன் சென்னை அத்தியாயம் - 2025 நிகழ்வு ஒரு சக்திவாய்ந்த தொடக்கமாக அமைந்தது. KG விருதுகள் தொடர்ந்து பல்வேறு அத்தியாயங்களாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் நடைபெற இருக்கிறது.

## நிறுவனர் - தமிழ்நாட்டின் கல்வித் திறன் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் முன்னோடி இளைஞர்

கல்சன் குழுமங்கள், KG Guidance & KG Awards நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர், முனைவர் எஸ் பிரவீன், 17 ஆண்டுகளுக்கும் மேலாக தொழில், கல்வி மற்றும் ஆலோசனை அனுபவத்துடன் தமிழ்நாட்டின் சாதனைகளை சர்வதேச அளவில் வெளிப்படுத்தும் உயர்தர மேடையாக KG Awards-ஐ வடிவமைத்துள்ளார். மேலும் படித்து முடித்த பட்டதாரிகள் அனைவரும் முதல் 30 நாட்களுக்குள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற சிந்தனையே பட்டதாரிகளின் முதன்மை குறிக்கோள் என்று எடுத்துரைத்தார். இந்த விழா நிகழ்வின் வெற்றிக்கும் அதன் தாக்கத்திற்கு முனைவர் எஸ் பிரவீன், தலைமை ஆலோசகர் முனைவர் ஹரி பிரசாத் தர்மசிவம், பொது மேலாளர் ராதிகா பிரபாகரன், துணை பொது மேலாளர் ஜெயக்குமார், சீனியர் மேனேஜர்கள் தர்ஷினி, முகமது ஜாஃபர், ஒருங்கிணைப்பாளர் சிவா மற்றும் நிறுவன பணியாளர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக முக்கியமானது.

## புதிய தலைமுறைக்கு! புதிய நம்பிக்கை!

KG Awards நிகழ்ச்சியின் மூலம் புதிய கல்வியாளர்கள் தொழில்முனைவோர்களுக்கு இடையேவணிகநட்புகள் உருவாகிஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்குபுதியவாய்ப்புகள் மற்றும் தொழில் ரீதியான சிந்தனைகள் கிடைத்தன. மேலும் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான புதிய வழிகாட்டுதலுடன் ஊக்கம் அளிக்கப்பட்டு மாநில முன்னேற்ற நோக்கில் செயல் முறைகள் தொடங்கப் பட்டன. இந்த நிகழ்வின் தாக்கம் பரவலாக பாராட்டப்பட்டு மாநில வளர்ச்சி பாதையில் ஒரு புதிய அத்தியாயம் படைக்குமென்பது திண்ணம்.







